**ஐ.டி.எண்.12/2023** 09.01.2026

**நி.த.சாட்சி 1 திரு.ஜெபஸ் எழில் இன்பகன் குறுக்கு விசாரணை**

25.03.2020 அன்று கொரோனா காரணமாக பள்ளி மூடப்பட்டது என்றால் சரிதான். மனுதாரருடன் சேர்ந்து 8 நபர்களை நாங்கள் பணியில் இருந்து அனுப்பிவிட்டோம் என்றால் சரிதான். மனுதாரரை பணியில் இருந்து விடுவிக்கும் பொழுது அவருக்கு நாங்கள் நஷ்ட ஈடு எதுவும் அளிக்கவில்லை. பள்ளி தற்பொழுது இயங்குகிறது என்றால் சரிதான். மனுதாரருடன் சேர்ந்து நிறுத்திய 8 நபர்களில் இரண்டு நபர்கள் தற்பொழுது பள்ளியில் பணிபுரிகிறார்கள் என்றால் பிரபு என்ற நபர் மட்டும் அரசாங்க பணியாளராக பள்ளியில் பணிபுரிகிறார். முதலில் அவரும் தினக்கூலி பணியாளராக தான் இருந்தார். மனுதாரருக்கு பின்பு தான் பிரபு முதலில் பணியில் சேர்ந்தார் என்றால் சரிதான். மனுதாரர் 2007-ல் இருந்து 2015 வரை பணிபுரிந்தார் என்றால் சரிதான். கே.என்.எச் என்ற தொண்டு நிறுவனம் நிதியை நிறுத்திவிட்டதால் நாங்கள் பெரும்பாலான பணியாளர்களை பணியில் இருந்து நிறுத்திவிட்டோம். அப்பொழுது அவர்களுக்கு பி.எப். தொகை அனைத்தும் செட்டில்மெண்ட் செய்யப்பட்டுவிட்டது. 2007-ல் இருந்து 2015 வரை மனுதாரர் பணிபுரிந்ததற்கான நஷ்ட ஈடு எதுவும் நாங்கள் வழங்கவில்லை என்றால் மனுதாரர் தற்காலிக பணியாளர் அதனால் அவருக்கு எதுவும் வழங்கவில்லை. மனுதாரர் ஒரு வருடத்தில் 240 நாட்களுக்கு மேல் பணிபுரிந்ததால் அவருக்கு இழப்பீடு வழங்காமல் நாங்கள் அவரை நிறுத்தியது தவறு என்றால் சரியல்ல. கொரோனா காலக்கட்டத்தில் பள்ளி மூடப்பட்டது மறுபடியும் பள்ளி இயங்கும் பொழுது அவருக்கு நாங்கள் பணி வழங்கியிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு பின்பு சேர்ந்த நபருக்கு பணி அளித்து விட்டு மனுதாரருக்கு மட்டும் பணிமறுப்பது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பிரபு என்ற நபர் இடைநிலை ஆசிரியர் மற்றும் காதுகேளாதவருக்கு போதிக்கும் சிறப்பு பயிற்சி பெற்றிருந்ததால் அவரை நிர்வாகம் பணியில் அமர்த்தியது. மனுதாரரை பணிநீக்கம் செய்தது தவறு என்றும் அவரை மீண்டும் பணி தொடர்ச்சியுடன் வேலைக்கு அமர்த்தி பின் சம்பளம் இதர பணப்பயன்களை அவருக்கு அளிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.01.19 14:28:22 +0530